**விளம்பர எண்:150.**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## அறிவிக்கை / விளம்பரம்

ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் தேர்வு –II–ல் அடங்கிய பின்வரும் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்காக 05–03–2008 மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன (தேர்வு/பணி குறியீட்டு எண்,005).

| வ. எண் | பதவியின் பெயர் | பணி | பதவிக் குறியீடு | காலி இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | தீயணைப்பு மற்றும் மீட்பு சார்நிலைப் பணிகள் துறையில் **நிலைய அலுவலர்.** | தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு சார்நிலைப் பணிகள் | **1096** | **23** |
| 2. | தொழில் மற்றும் வணிகத்துறையில் **பண்டக காப்பாளர் –தரம்–II** | தமிழ்நாடு அமைச்சுப்பணி | **1098** | **1** |
| 3. | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் (பயிற்சிப் பிரிவு) **பண்டக காப்பாளர்.** | தமிழ்நாடு அமைச்சுப்பணி | **1099** | **5** |

**2.. முக்கிய தேதிகள்:–**

| | | நாள் | நேரம் |
|---|---|---|---|
| அ. | அறிவிக்கை நாள் | 30–01–2008 | – |
| ஆ. | விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 05–03–2008 | மாலை 5.45 மணி |
| இ. | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | 01–06–2008 | முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

**3. சம்பள விகிதம் :-**

1. நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு சார்நிலைப் பணிகள் துறை ரூ.5,000–150–8,000/–
2. தொழில் மற்றும் வணிகத்துறையில் பண்டக காப்பாளர்–தரம்–II ரூ.4,000–100–6,000/–
3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் (பயிற்சி பிரிவு) பண்டக காப்பாளர். ரூ.4,000–100–6,000/–

**4. காலியிடப் பகிர்வு:-**

| வ. எண் | பதவியின் பெயர் | பொது முறை | பி.வ. | பி.வ.கி | மி.பி.வ/ சீ.ம | ஆ.தி. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தீயணைப்பு மற்றும் மீட்பு சார்நிலைப் பணிகள் துறையில் நிலைய அலுவலர். | 7 (2 ம) | 5 (2 ம) | 1 | 5 (2 ம) | 5 (2 ம) | 23 (8 ம) |
| 2. | தொழில் மற்றும் வணிகத்துறையில் பண்டக காப்பாளர்–தரம்–II | 1 | – | – | – | – | 1 |
| 3. | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் (பயிற்சி பிரிவு) பண்டக காப்பாளர். | 2 (1 ஆ.வி) | 1 | – | 1 | 1 | 5 (1 ஆ.வி) |

**விரிவாக்கம் :–**

பி.வ. – பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பி.வ.கி.– பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர், மி.பி.வ/சீ.ம. – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், ஆ.தி.– ஆதி திராவிடர், ம – மகளிர், ஆ.வி – ஆதரவற்ற விதவை

<u>குறிப்பு</u>:

கொடுக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில் அடைப்புக்குறியில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட வகையினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலி பணியிடங்களும் அடங்கும்.

**5. பொது விவரங்கள்:-**

அ. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே பணி நியமன ஒதுக்கீட்டு விதி பின்பற்றப்படும்.

ஆ. தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் அதே பிரிவைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

இ. இந்நியமனத்திற்கு முன்னாள் இராணுவத்தினர் 5% நியமன ஒதுக்கீட்டு விதி பொருந்தும். இருப்பினும் அவர்களுக்கான சுழற்சி முறை (Reserved Turn) இத்தெரிவில் ஏற்படவில்லை.

ஈ. தொழில் மற்றும் வணிகத்துறையில் பண்டக காப்பாளர்–தரம்–II மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் உள்ள பண்டகக் காப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பிக்க உடல் ஊனமுற்றோருக்கான 3% நியமன ஒதுக்கீட்டு விதி பொருந்தும். இருப்பினும் அவர்களுக்கான சுழற்சி முறை (Reserved Turn) இத்தெரிவில் ஏற்படவில்லை.

**உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் தீயணைப்பு மற்றும் மீட்பு சார்நிலைப் பணிகள் துறையில் நிலைய அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.**

உ. 'ஆதரவற்ற விதவை'களுக்கு நியமனம் அளிப்பதற்கான இட ஒதுக்கீடு நிலைய அலுவலர் பதவிக்கு பொருந்தாது. **'ஆதரவற்ற விதவை'களுக்கான இட ஒதுக்கீடு விதி தொழில் மற்றும் வணிகத்துறையில் பண்டக காப்பாளர்–தரம்–II மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் உள்ள பண்டகக் காப்பாளர் பதவிகளுக்கு பொருந்தும்.**

**(பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' பத்தி 4–ன் கீழுள்ள குறிப்பினைக் காண்க)**

ஊ. <u>உடற் தகுதிச் சான்றிதழ்</u> (ஆண்/பெண் இருபாலருக்கும்) :

<u>1. **நிலைய அலுவலர்**</u>:

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் நிலைய அலுவலர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பார்வைத் திறனை பெற்றிருத்தல் வேண்டும்.

(a) <u>Without Glasses</u> :-

| | Right Eye | Left Eye |
|---|---|---|
| Distant vision | 6/6 | 6/6 |
| | (Snellen) | |
| Near Vision | 0.5 | 0.5 |
| | (Snellen) | |

(b) Each eye must have a full field of vision.

(c) Colour blindness, squint or any morbid condition of eyes or lids of either eye shall be deemed to be a disqualification.

<u>2. பண்டக காப்பாளர்–தரம்–II தொழில் மற்றும் வணிகத் துறை மற்றும் பண்டக காப்பாளர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை):</u>

பண்டகக் காப்பாளர் பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி, தமிழ் நாடு நீதி அமைச்சுப்பணி மற்றும் தமிழ்நாடு தலைமைச்செயலகப் பணிகளில் அடங்கும் பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் உடற் தகுதி சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். இப்பதவிகளுக்கான பார்வையின் தரம் – தரம் –III அல்லது அதற்கு மேம்பட்டது.

| | **Better eye.** | | **Worse eye.** |
|---|---|---|---|
| Distant Vision without glasses | 6/9 | **OR** | 6/9 |
| Distant Vision with glasses | 6/6 | | 6/12 |

Candidates with defective vision should produce eye fitness certificate from qualified eye specialist.

எ. பண்டகக் காப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் உடல் ஊனமுற்றவர்கள், தங்கள் ஊனம் தாங்கள் தேர்வு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழு திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இராது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் கழகத்திடமிருந்து (Medical Board) பெற்று நியமனம் செய்யப்படுவதற்கு முன் அளித்திட வேண்டும்.

ஏ. அறிவிக்கப்பட்டுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். வாய்மொழி தேர்விற்கு விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் முன்போ அல்லது நியமனத்திற்கு தெரிவு செய்வதற்கு முன்போ இருக்கும் காலியிடங்களின் நிலைமைக்கேற்ப காலியிட மதிப்பீட்டில் மாறுதல் செய்யப்படலாம்.

ஐ. தெரிவு குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் தெரிவு முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் பெறப்படுதல் வேண்டும். 90 நாட்களுக்கு பின்பு பெறப்படும் தெரிவு குறித்த எந்தவொரு கோரிக்கையும் கவனிக்கப்படமாட்டாது.

ஒ. அரசாணை நிலை எண். 241 ப.(ம).நி.சீ.(கே) துறை, நாள் 29.10.2007 –ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 30% இடஒதுக்கீட்டில் 3.5% பி.வ. கிறித்துவருக்கும், 3.5 % பி.வ. முஸ்லீம்களுக்கும் ஒதுக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த அரசாணையின்படி இட ஒதுக்கீட்டை கோரும் விண்ணப்பதாரர்கள் OMR விண்ணப்பப்படிவத்தின் கலம் 6, 7 மற்றும் 7(a)–யினை கட்டாயமாக நிரப்பி அதற்கு கீழுள்ள கட்டத்தை கருமையாக்கவேண்டும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குண்டான அனைத்து சலுகைகள் / விதி தளர்வுகள் / பலன்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் ஆகியோருக்கும் பொருந்தும்.

<u>குறிப்பு</u> :

**தேர்வாணையத்தின் பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள், தகவல் சிற்றேடு, OMR விண்ணப்பப் படிவம் ஆகியவற்றில் எங்கெங்கு பி.வ. (பிற்படுத்படுத்தப்பட்ட வகுப்பு) என குறிப்பிடப்பட்டுள்ளதோ அதனை பி.வ. (பி.வ.கி. மற்றும் பி.வ.மு. அல்லாதோர்) பி.வ.கி., பி.வ. மு . என்று வாசிக்கவும்).**

(பி.வ.கி – பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர், பி.வ. மு – பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம்).

## 6. <u>தகுதிகள்:-</u>

அ. <u>வயது</u> (1–7–2008) அன்று :

**1. <u>நிலைய அலுவலர் பதவிக்கு</u>**

(i) <u>குறைந்தபட்ச வயது வரம்பு –20 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும். (அனைத்து விண்ணப்பதாரருக்கும்) (அதாவது, 1.7.1988 அன்றோ அல்லது அதற்கு முன்போ பிறந்திருக்க வேண்டும்)</u>

(ii) <u>அதிகபட்ச வயது வரம்பு – 30 வயது நிறைவு செய்திருத்தல் கூடாது.</u>

நிலைய அலுவலர் பணி நியமனத்திற்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச வயது வரம்பு அனைத்து வகுப்பினருக்கும் பொருந்தும். (தேர்வாணையத்தின் பணி வேட்பாளர்களுக்கான விதி முறைகளில் பத்தி 4 நிலைய அலுவலர் பதவிக்கு பொருந்தாது.)

**2. <u>பண்டக காப்பாளர்–தரம்–II தொழில் மற்றும் வணிகத் துறை மற்றும் பண்டக காப்பாளர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை):</u>**

(i) <u>குறைந்தபட்ச வயது வரம்பு –18வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும். (அனைத்து விண்ணப்பதாரருக்கும்) (அதாவது, 1.7.1990 அன்றோ அல்லது அதற்கு முன்போ பிறந்திருக்க வேண்டும்)</u>

(ii) <u>அதிகபட்ச வயது வரம்பு – 30 வயது நிறைவு செய்திருத்தல் கூடாது.</u>

<u>குறிப்பு</u>:

1. ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியவர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு இல்லை.

2. அரசாணை எண்.98, பணியாளர் (மற்றும்) நிருவாகச் சீர்திருத்த (எஸ்) துறை, நாள் 17.07.2006 மற்றும் அரசாணை எண்.152, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (எஸ்) துறை, நாள் 18.09.2006ன்படியும் பின்னர் பெறப்பட்ட தெளிவுரைகளின்படியும் பணிநியமன தடை ஆணையால் பாதிக்கப்பட்ட வேலையில்லா இளைஞர்களுக்கும், பணியில் இருப்பவர்களுக்கும் உச்ச வயது வரம்பில் 5 ஆண்டுகள் தளர்த்தப்படும்.

3. மாநில / மத்திய அரசில் முறையாக (Regular) ஐந்தாண்டுகள் பணிபுரிந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியப் பிரிவுகளைச் சாராத மற்ற விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்புக்குள் இருப்பினும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.
4. டான்சி நிறுவனத்தில் பணிபுரிந்து ஆட்குறைப்புக்குள்ளான தொழில்நுட்பத் தகுதியுள்ள, மற்றும் தொழில்நுட்பத் தகுதியில்லாத பணியாளர்கள் / அரசுக் கழகங்கள் மற்றும் அரசின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் இதுவரை பணியிலமர்த்தப்படாமலிருப்பவர்கள் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு தவிர எல்லா தகுதிகளும் இருக்கும் பட்சத்தில் இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்கள் (சான்று சமர்ப்பிக்க வேண்டும்) தெரிவு செய்யப்பட்டால் விதிமுறைகளில் உள்ள வயது வரம்பு இவர்கள் பொருட்டு அரசால் தளர்த்தப்படும்.

## ஆ) கல்வித் தகுதி:

இவ்வறிவிக்கை நாளான 30 -01-2008 அன்று கீழ்கண்ட அல்லது அதற்கு சமமான அல்லது மேற்பட்ட கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

1. பண்டக காப்பாளர்–தரம்–II **(தொழில் மற்றும் வணிகத் துறை)**

**மற்றும்**

2. **பண்டகக் காப்பாளர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை(பயிற்சி பிரிவு):**

பி.யு.சி. (PUC) அல்லது எச்.எஸ்.சி. (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. **நிலைய அலுவலர் பதவிக்கு**

(i) **கல்வித் தகுதி:**

**பிறவகுப்பினருக்கு:**

**பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட** B.A., அல்லது B.Sc., அல்லது B.Com., பட்டம் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.O.L பட்டம் அல்லது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.B.A., பட்டம் அல்லது சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட B.Lit. பட்டம்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் ஆகியோருக்கு :

**பி.யு.சி (PUC) அல்லது எச்.எஸ்.சி. (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**

**பிற தகுதிகள் சமமாக இருப்பின் நாக்பூரில் உள்ள தேசிய தீயணைப்பு பணிக்கல்லூரியில் ஏதாவது ஒரு பயிற்சிப் பிரிவில் வெற்றிகரமாக பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

(சமமான கல்வித் தகுதி குறித்து தேர்வாணையத்தின் “பணி வேட்பாளர்களுக்கான விதி'' முறைகளில் பத்தி எண்.9ஐக் காண்க.)

(ii) உடற்தகுதி (நிலைய அலுவலர் பதவிக்கு)

| ஆண் விண்ணப்பதாரர்களுக்கு | | பெண் விண்ணப்பதாரர்களுக்கு: | |
|---|---|---|---|
| (a) Height not less than (without boots or shoes) | 165 Cms | (a) Height not less than (without boots or shoes) | 157 Cms |
| (b) Chest (Normal) | 84 Cms | - | |
| (c) Chest (Expanded) | 89 Cms. | - | |
| (d) Chest (Expansion) | 5 Cms. | - | |
| (e) Weight (without boots or shoes) | 50 kgs. | - | |

The measurement should be given in Metric Standard.

(iii) **Physical Efficiency Test for Men:**

Candidates applying for the post of Station Officer, Fire and Rescue Service must undergo and qualify in the Physical Efficiency Test to be conducted by the Fire and Rescue Service Department before they are admitted to the Oral Test. The Date, Time and place of the Physical Efficiency Test will be intimated to the candidates by the Fire and Rescue Service Department. The programme of the Physical Efficiency Test will consist of the under mentioned 8 Athletic Events given below:

**For Men**

| Sl. No. | Events. | Three Star Standard | Two Star Standard | One Star Standard |
|---|---|---|---|---|
| 1. | 100 Metres run | 12 Seconds | 13 Seconds | 14 Seconds |
| 2. | High Jump | 5feet 3 inches (160.02 Cms.) | 5 feet (152.40 Cms) | 4 feet 6 inches (137.16.Cms) |
| 3. | Long Jump | 19 feet(5.80M) | 17 feet(5.19M) | 15 feet (4.57M) |
| 4. | Putting the shot of 7.27kg (16 lbs) | 28 feet(8.53M) | 24 feet(7.32M) | 20 feet(6.10 M) |
| 5. | Throwing the Cricket Ball | 275 feet (83.82 M) | 225 feet (68.58M) | -- |
| 6. | Rope Climbing (Only hands) | 16 feet (4.88M) | 14 feet(4.27M) | 12 feet(3.66M) |
| 7. | Pull-ups or Chinning | 15 | 10 | 8 |
| 8. | 1,500 Metres run | 5 Minutes | 5 Minutes 15 Seconds | 5 Minutes 45 Seconds |

Out of these eight events specified in the table above, a candidate should select at least five events and qualify himself for admission to Oral Test by qualifying at least for the One Star Standard in three out of the five event.

**For Women:**

| Sl. No. | Events. | Three Star Standard | Two Star Standard | One Star Standard |
|---|---|---|---|---|
| 1. | 100 Metres run | 14.5 Seconds | 15.5 Seconds | 16.5 Seconds |
| 2. | 200 Metres run | 30 Seconds | 33 Seconds | 36 Seconds |
| 3. | High Jump | 4.6 Feet (1.40 mtr) | 4 Feet (1.22 mtr) | 3.5 Feet (1.06.mtr) |
| 4. | Long Jump | 14 Feet (4.27 mtr) | 12 Feet (3.65 mtr) | 10 Feet (3.05 mtr) |
| 5. | Shot Put (4 Kg) | 22Feet (6.7mtr) | 18 Feet (5.5 mtr) | 14 Feet (4.27 mtr) |
| 6. | Throwing the Cricket Ball | 225 Feet (68.58 mtr) | 175 Feet (53.34mtr) | 150 Feet (45.7 mtr) |
| 7. | Discus Throw | 144 Feet (44 mtr) | 128 Feet (39 mtr) | 112 Feet (34 mtr) |
| 8. | Javelin Throw | 151 Feet (46 mtr) | 135 Feet (41 mtr) | 118 Feet (36 mtr) |

Out of these eight events, a candidate should select at least five events and qualify herself for admission to the Oral Test by qualifying at least for the One Star Standard in three out of the five events.

**இ) <u>தமிழில் தகுதி :</u>**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இவ்வறிவிக்கை நாளன்று போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும். (மேலும் விபரங்களுக்கு “பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள் பத்தி 10ஐக் காண்க.)

**7. <u>பாடத்திட்டம்:</u>**

**<u>ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் தேர்வு–II எச்.எஸ்.சி. –தரம் (HSC- Standard) எழுத்துத் தேர்வு (கொள்குறி வகை) மற்றும் வாய்மொழித் தேர்வு ஆகியவற்றுக்கான பாடத்திட்டம்:–</u>**

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் | |
|---|---|---|---|---|
| | | | எழுத்து மற்றும் வாய் மொழித் தேர்வு | எழுத்துத் தேர்வு மட்டும் |
| பொதுஅறிவு (100 வினாக்கள்) (HSC – தரம்) + பொதுத்தமிழ் / பொது ஆங்கிலம் (100 வினாக்கள்) (SSLC– தரம்) | 3 மணி நேரம் | 150 + 150 } 300 | 102 | 90 |
| வாய்மொழித் தேர்வு மற்றும் பதிவுரு | | 40 | | |
| **மொத்தம்** | | **340** | | |

<u>குறிப்பு:</u>

(i) வினாத்தாள் இரண்டு மாதிரிகளைக் கொண்டது. அதாவது 1) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்) மற்றும் பொதுத்தமிழ் வினாக்கள் (100 வகைகள்) 2) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்) மற்றும் பொது ஆங்கிலம் வினாக்கள்(100 வகைகள்). விண்ணப்பதாரர்கள் முதல் 100 வினாக்களுக்கு பொது அறிவுத் தேர்வில் பதிலளிக்க வேண்டும். அடுத்த 100 வினாக்களுக்கு அவர்கள் பொதுத் தமிழிலோஅல்லது பொது ஆங்கிலத்திலோ பதிலளிக்க வேண்டும். விண்ணப்பதாரர் OMR விண்ணப்பப்படிவத்தில் கட்டாய பாடம் என்ற தலைப்பின் கீழ் உள்ள கலம் 22–ல் இரண்டாவதாக வரும் 100 வினாக்களை பொதுத்தமிழில் எழுதுகிறாரா அல்லது பொது ஆங்கிலத்தில் எழுதுகிறாரா என தெளிவாக குறிப்பிட வேண்டும். OMR விண்ணப்பப்படிவத்தில் கலம் 22ஐ நிரப்பாத விண்ணப்பதாரர்கள் தண்டனைக்குள்ளாக்கப்படுவர்.

(ii) பொது அறிவு தாளுக்கான வினாக்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இருக்கும். பொதுத்தமிழ் வினாத்தாள் தமிழிலும், பொது ஆங்கில வினாத்தாள் ஆங்கிலத்திலும் இருக்கும்.

(iii) மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களுக்கான பாடதிட்டம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது..

| வ.எண் | பாடதிட்டம் | பக்கம் | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டு எண் & நாள் |
|---|---|---|---|
| 1. | பொது அறிவு | **490** | எண்.16, நாள் 01.08.2004 |
| 2. | பொது தமிழ் | **721** | எண்.11, நாள் 16.05.2001 |
| 3. | பொது ஆங்கிலம் | **722** | எண்.11, நாள் 16.05.2001 |

மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களுக்கான பாடதிட்டம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in –லும் கிடைக்கும்.

## 8. தேர்வு மையங்கள்:-

பின்வரும் மையங்களில் எழுத்துத் தேர்வு நடைபெறும்:

| வ. எண். | மையத்தின் பெயர் | மையக் குறியீடு |
|---|---|---|
| 1. | சென்னை | 001 |
| 2. | கோயம்புத்தூர் | 002 |
| 3. | மதுரை | 010 |
| 4. | சேலம் | 017 |
| 5. | தஞ்சாவூர் | 019 |
| 6. | திருச்சிராப்பள்ளி | 025 |
| 7. | திருநெல்வேலி | 026 |
| 8. | வேலூர் | 027 |
| 9. | விழுப்புரம் | 028 |

குறிப்பு:

i) விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒருமையத்தைத் தேர்வு செய்து தங்கள் சொந்த செலவில் சென்று தேர்வு எழுத வேண்டும்.

ii) தேர்வு மையத்தை மாற்றக்கோரி வரும் கோரிக்கை ஏற்கப்படாது.

iii) தேர்வு மையங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ, குறைக்கவோ அல்லது விண்ணப்பதாரர்களை வேறு மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமையுண்டு.

## 9. விருப்ப முன்னுரிமை:–

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் OMR விண்ணப்பப் படிவம் கலம் 23ல் தாங்கள் தெரிவு செய்யப்பட விரும்பும் பதவிகளுக்கான முன்னுரிமை வரிசையினை தெரிவிக்க வேண்டும்.

## 10. தெரிவுசெய்யும் முறை:–

**நிலைய அலுவலர் பதவிக்கு**:-

விண்ணப்பதாரரைத் தெரிவு செய்யும் முறை தொடர்ச்சியான மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது. அவை (i) எழுத்துத் தேர்வு (ii) உடற் தகுதித் தேர்வு மற்றும் (iii) நேர்முகத் தேர்வு, உடற்தகுதித் தேர்வில் தேர்ச்சி, எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு இரண்டிலும் சேர்த்து விண்ணப்பதாரர்கள் பெறும் மொத்த மதிப்பெண்கள் மற்றும் நியமனங்களுக்கான இட ஒதுக்கீட்டு விதி ஆகியவற்றின் அடிப்படையில் இறுதித் தெரிவு மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத்தேர்வு, உடற்த் தகுதித் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளில் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்படுவதற்குத் தேவையான மதிப்பெண்களை எழுத்துத் தேர்வில் விண்ணப்பதாரர் பெற்றிருப்பினும், உடற்தகுதித் தேர்வில் அல்லது வாய்மொழித் தேர்வில் கலந்துகொள்ளாவிடில் நிலைய அலுவலர் பதவிக்கு தெரிந்தெடுக்கப்படுவதற்குப் பரிசீலிக்கப்பட்டமாட்டார்.

**பண்டக காப்பாளர்–தரம்–II தொழில் மற்றும் வணிகத் துறை மற்றும் பண்டகக் காப்பாளர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை(பயிற்சி பிரிவு):**

விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெறும் மொத்த மதிப்பெண்கள் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட பதவி முன்னுரிமை மற்றும் பணிநியமன இட ஒதுக்கீட்டு விதி ஆகியவற்றின் அடிப்படையில் இறுதித் தெரிவு மேற்கொள்ளப்படும்.

(மேலும், விவரங்களுக்கு "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்"பத்தி 22 (ஆ) என்பதைக் காணலாம்.)

## 11. பிணையம்:-

1. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் பண்டகக் காப்பாளர் பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்ச்சித் துறையின் இயக்குநரால் கோரப்படின் ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) பிணையத்தொகையாக செலுத்த வேண்டும்.

2. தொழில் மற்றும் வணிகத் துறையில் பண்டகக் காப்பாளர்–தரம்–II பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தொழில் மற்றும் வணிகத் துறையின் ஆணையரால் கோரப்படின் ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) பிணையத்தொகையாக செலுத்த வேண்டும்.

**12. <u>தேர்வுக் கட்டணம்</u> :– ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்)**

தேர்வுக் கட்டணம், தகவல் சிற்றேட்டின் (Brochure) பிற்சேர்க்கை –III இல் பட்டியலிடப்பட்டுள்ள அஞ்சலகங்களில் ஏதேனும் ஒன்றின் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். பணம் செலுத்தியதற்கான அஞ்சல் ரசீதினை விண்ணப்பப் படிவத்தில் அதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் ஒட்டுதல் வேண்டும். (மேலும் விவரங்களை, தகவல் சிற்றேட்டின் பகுதி–III இன் கீழ் உள்ள பத்தி–2லும், தேர்வுக் கட்டண சலுகை விவரங்களை "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 12–லும் காணலாம்) .

**<u>குறிப்பு :</u>**

அஞ்சல் ரசீது பெறும்பொழுது அஞ்சலகத்திற்கு சேவைக் கட்டணமாக அனைத்து விண்ணப்பதாரர்களும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர் அஞ்சல் ரசீது பெறுவதற்கு அஞ்சலகக் கவுண்டரில் உள்ள எழுத்தரிடம் OMR விண்ணப்ப எண்ணை (ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பவர் தவிர) தெரிவிக்க வேண்டும்.

**13.<u>விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டியவைகள்</u>:-**

<u>தேர்வாணையத்தின் "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 15 –லும், மற்றும் தகவல் சிற்றேட்டில் பகுதி II இன் கீழ் இனம் 25–லும் குறிப்பிடப்பட்டுள்ளபடி,</u> விண்ணப்பதாரர்கள் தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் (அவர்கள் பெற்றுள்ள கல்வித் தகுதிகளுக்குரிய ஆதாரங்கள் உட்பட) மற்றும் <u>கட்டண விலக்கு கோரப்படவில்லையெனில், ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) மதிப்புள்ள அஞ்சல் ரசீதினை</u> விண்ணப்பப் படிவத்தில் அதற்கென அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டி அனுப்பவேண்டும். **<u>மூலச் சான்றிதழ்கள் அனுப்பப்படக்கூடாது.</u>** 'ஆன்லைன்' மூலம் விண்ணப்பிப்பவர்கள் இந்த அறிவிக்கை/விளம்பரத்தின் பத்தி 16 இல் துணை பத்தி 'ஈ'யைப் பார்க்கவும்.

நிலைய அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிடப்பட்ட இணைப்புகளுடன் மருத்துவ அலுவலரிடமிருந்து பெறப்பட்ட உடற் தகுதிக்கான சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

**மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

**14.<u>தடையின்மைச் சான்றிதழ்</u>:-**

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே மத்திய அரசு அல்லது இந்தியாவில் ஒரு மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது அரசு சார்பு நிறுவனங்கள் அல்லது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் அது போன்ற அமைப்புகள் ஆகியவற்றில் (நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ) ஏற்கனவே பணியில் இருப்பவர்கள் தங்கள் துறைத் தலைவர் மூலமாகவோ அல்லது வேலையளிப்போர் (Employer) மூலமாகவோ விண்ணப்பங்களை அனுப்பத் தேவையில்லை. அதற்குப் பதிலாக, தமக்கு வேலையளிப்பவர்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்துவிட்டு, தேர்வாணையத்திற்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம். எனினும், வாய்மொழித்தேர்வின்போதோ, அல்லது சான்றிதழ்களை சரிபார்க்கும் போதோ வேலையளிப்பவரிடமிருந்து "தடையின்மைச் சான்றிதழ்" பெற்று அளித்திட வேண்டும். தடையின்மைச் சான்றிதழ் வழங்கிய பிறகு, மற்றும் நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு அவர் மீது ஏதாவது குற்ற வழக்கு/ ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டால் அல்லது ஏதாவது தண்டனை வழங்கப்பட்டால் இந்த உண்மையை இத்தகைய விண்ணப்பதாரர்கள் இந்த நியமனம் தொடர்பான பதிவு எண்ணை குறிப்பிட்டு உடனடியாக தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

**15.<u>சலுகைகள்</u>:-**

ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம், ஆதரவற்ற விதவையர், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் 40 வயதிற்குட்பட்ட விடுவிக்கப்பட்ட மற்றும் வேலைசெய்து வரும் மாநில அரசின் தற்காலிகப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் தேர்வாணையத்தின், <u>"பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்"</u> கொடுக்கப்பட்டுள்ளன.

**16.<u>விண்ணப்பப்படிவங்கள் வழங்குதல்</u>:-**

(அ) OMR விண்ணப்பப்படிவத்துடன் விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்வதற்குரிய பொது விவரங்கள் அடங்கிய "தகவல் சிற்றேடு", தேர்வாணையத்தின், "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்"_மற்றும் விண்ணப்பம் அனுப்பப்படுவதற்கான உறை ஆகியவற்றைத் தமிழகத்திலுள்ள எந்த ஒரு தலைமை அஞ்சலகத்திலும், அல்லது புதுச்சேரி தலைமை அஞ்சல் அலுவலகத்திலும், லால்குடி அல்லது விருத்தாசலம் அஞ்சலகத்திலும் ரூ.30/– (ரூபாய் முப்பது மட்டும்) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். (அஞ்சலகங்களின் பெயர் பட்டியல் தேர்வாணையத்தின் இணைய தளமான www.tnpsc.gov.in – ல் உள்ளது.)

(ஆ) OMR விண்ணப்பப் படிவத்தை, சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் விற்பனைப் பிரிவில் அனைத்து வேலை நாட்களிலும், (பகல் 1.30 மற்றும் 2.00 மணி இடையிலான மதிய உணவு இடைவேளை நேரம் தவிர) விண்ணப்பம் வந்து சேர்வதற்கான கடைசி நாள் மாலை 5.00 மணி வரையில் ரூ.30/– (ரூபாய் முப்பது மட்டும்) ரொக்கமாகச் செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம். **<u>விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் மூலமாக விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.</u>**

இ) விண்ணப்பதாரர்கள் OMR விண்ணப்பப் படிவத்தை (AD அல்லது தொடர்ந்து வரும் வரிசைகள்) மட்டுமே பயன்படுத்த வேண்டும். தட்டச்சு செய்யப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட அல்லது ஒளிநகலிடப்பட்ட அல்லது புகைப்பட நகல் எடுக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது; அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஈ) விண்ணப்பதாரர்கள், தேர்வாணையத்தின் www.tnpsc.gov.in என்னும் இணையதளத்தில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கும் வசதியையும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்லைனில் பதிவு செய்வதற்கு முன்பாக, தகவல் சிற்றேட்டின் பிற்சேர்க்கை–III இல் பட்டியலிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு அஞ்சலகத்திலிருந்து பெறப்பட்ட ரூ.130/– (அதாவது, விண்ணப்பக் கட்டணம் ரூ.30/– தேர்வுக் கட்டணம் ரூ.100/–)க்குரிய அஞ்சல் ரசீது ஒன்றைத் தயாராக வைத்துக்கொண்டு, விண்ணப்பதாரர்கள் "ஆன்லைன்" மூலம் விண்ணப்பிக்கலாம். தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்கு கோரும் விண்ணப்பதாரர், விண்ணப்பக் கட்டணமான ரூ.30 க்குரிய அஞ்சல் ரசீதினைத் தயாராக வைத்திருக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம்/தேர்வுக் கட்டணத்திற்குப் பெறப்பட்ட அஞ்சல் ரசீதை விண்ணப்பப் படிவத்தில் அதற்கென அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டுதல் வேண்டும். ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் வேட்பாளர்களுக்கும் இவ்வறிவிக்கை / விளம்பரம் / "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்"/ தகவல் சிற்றேட்டில் உள்ள அறிவுரைகள் பொருந்தும். <u>விண்ணப்பதாரர் ஆன்லைனில் விண்ணப்பிக்கும்பொழுது, (இணையதளத்திலிருந்து விண்ணப்பப்படிவத்தை அச்சிட்டு எடுத்து, கையொப்பமிடப்பட்டு) அஞ்சல் ரசீதுடனும், சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ்களின் நகல்களுடனும் தேர்வாணையத்தின் அலுவலகத்தில் விண்ணப்பத்தைப் பெறுவதற்கான கடைசி நாளிலோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு விண்ணப்பத்தினை அனுப்பி வைத்திட வேண்டும். தவறினால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.</u> ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் வசதி 03–03–2008 மாலை 5.45 மணியுடன் முடிவடைகிறது.

**17.<u>விண்ணப்பம் பெறுதல்</u>:-**

(அ) OMR விண்ணப்பப்படிவத்தை தேர்வாணைய அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு முன்பாகப் பின்வரும் இனங்களையும் சரிபார்த்துக் கொள்ளுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(i) உறுதிமொழிக்குக் கீழ் விண்ணப்பதாரர், பால்பாயின்ட் பேனாவினால் அல்லது பவுண்டன் பேனாவினால் மட்டும் கையொப்பம் இட வேண்டும். **<u>கையொப்பம் இடப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு உரியதாகும்.</u>**

(ii) **பதவி முன்னுரிமையின்படி பதவிக் குறியீட்டு எண்ணை –ஐ** OMR **விண்ணப்பப் படிவத்தின் கலம் 23ல் குறிப்பிட்டு** அதற்கு கீழே உள்ள கட்டத்தை கருமையாக்க வேண்டும்.

(iii) OMR விண்ணப்பப் படிவத்தின் கலம் 11, 14(c),14(d) மற்றும் கலம் 23(a) ஆகியவற்றை நிரப்பத் தேவையில்லை.

(iv) OMR விண்ணப்பப் படிவத்தின் கலம் 1, 1 (a), 3, 4 கலம் 22–ன் கீழுள்ள கட்டாய பாடம் மற்றும் கலம் 23 ஆகியவைகளை இந்த அறிவிக்கை/விளம்பரத்தில் உள்ள விவரங்களின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(v) OMR விண்ணப்பப் படிவத்தின் கலம் 6, 7 மற்றும் 7(a) ஆகியவைகளை நிரப்பி அவற்றிற்கு கீழே உள்ள கட்டத்தை கருமையாக்க வேண்டும்.

(ஆ) <u>நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை–600 002 எனும் முகவரிக்கு 05–03–2008 மாலை 5.45 மணிக்கு வெகு முன்னதாகவே கிடைக்குமாறு பதிவஞ்சலில்/விரைவு அஞ்சலில் அனுப்பி வைத்திட வேண்டும்.</u>

**செயலாளர்.**